5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பெ. பொன்னுசாமி, பொதுக்கணக்குக் குழுவின் தலைவர்.

முற்பகல் 11.30

திரு. பெ. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான பொதுக்கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

1. இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியங்களிலும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றி குழு அளித்த நாற்பத்து மூன்றாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை.

2. 1980-81 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகைச் செலவு பற்றிய பொதுக் கணக்குக் குழு அளித்த பதினேழாவது அறிக்கை (எட்டாவது பேரவை) மற்றும் இருபத்தாறாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை)யில் பொதுப்பணித் துறை குறித்து மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது துறை எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய தொண்ணூற்று ஆறாவது அறிக்கை.

3. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக்கணக்குக் குழு அளித்த முப்பத்தோராவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் வருவாய்த் துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய தொண்ணூற்று ஏழாவது அறிக்கை.

4. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1975-76 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கைகளின்மீது பொதுக் கணக்குக்குழு அளித்த ஐந்தாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் இரண்டாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் வருவாய்த் துறை குறித்து தொடரப்பட்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய தொண்ணூற்று எட்டாவது அறிக்கை.

5. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1975-76 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கைகளின்மீது பொதுக்கணக்குக் குழு அளித்த ஐந்தாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் இரண்டாவது அறிக்கை (எட்டாவது

பேரவை)யில் பொதுப்பணித் துறை குறித்து தொடரப்பட்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை.

6. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின்மீது பொதுக்கணக்குக் குழு அளித்த முப்பத்தோறாவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் போக்குவரத்துத் துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நூறாவது அறிக்கை.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திருமதி ரமணி நல்லதம்பி, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் எட்டாவது (பத்தாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்).

சென்னைப் பல்கலைக் கழக மற்றும் மதுரை–காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் மதுரை–காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் மதுரை–காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு அறிமுகம்செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.